DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Cross Examination of Witness

11.12.2019

அசா.1 - பிரபாகரன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 2, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

எனக்கு, 2 மற்றும் 3 எதிரிகளை நேரடியாக தெரியாது எனவும், அவர்களுக்கும் எனக்கும் எந்த பழக்கமும் இல்லை என்றும் சொன்னால், சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக நான் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல.

(இத்துடன் 25.09.2019, 06.11.2019, 27.11.2019 மற்றும் 04.12.2019 ஆகிய தேதிகளில் நடைபெற்ற குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக வழக்கறிஞர் சமர்ப்பித்தார். அவரது ஏற்பு அனுமதிக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.)

25 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

25 வது எதிரியை எனக்கு தெரியாது என்றால், சரிதான். எனக்கு நண்பர் என்று சொல்லக்கூடிய ஒரு நபர் இந்த வழக்கில் 22 வது எதிரி சுரேஷ்குமார் என்று சொன்னால், சரிதான். அவரது அண்ணன் பெயர் ரமேஷ் என்றால், சரிதான். சுரேஷ்குமாருக்கும், ரமேசுக்கும் , 25 வது எதிரியைத் தெரியுமா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. 03.09.2012 ம் தேதி தர்மபுரி போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால், சரிதான்.

எனது நண்பர் சுரேஷ்குமார், என்னிடம், எதிரி பாலாஜிக்கு வினாத்தாளையும், விடைத்தாளையும் படிக்கக் கொடுத்ததாக கூறினார் என்றால், சரிதான். என்னை கைது செய்த தேதி என்னவென்றால், 03.09.2012 ம் தேதி என்னைக் கைது செய்தார்கள். 03.09.2012 ம் தேதி என்னை கைது செய்த பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து நான் ஜாமீனில் வெளியில் வந்தேன் என்றால், 40 முதல் 45 கழித்து வந்தேன். என்னை ஜாமீனில் விடுவிக்க எந்த நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. நான் ஜாமீனில் வெளியில் வந்த பின்பு எங்கு நிபந்தனை கையொப்பம் செய்தேன் என்றால், கம்பைய நல்லூர் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன். ஜாமீனில் நான் வெளியில் வந்த பிறகும், பாலக்கோடு நீதிமன்றத்தில் நான் வாக்குமூலம் கொடுக்கும் வரைக்குமான இடைப்பட்ட காலத்தில் என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால், பாலக்கோடு நீதிமன்றத்தில் நான் வாக்குமூலம் கொடுப்பதற்கு 2 மாதத்திற்கு முன்பாக என்னை சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தனர். போலீசார் என்னை விசாரித்தபோது நான் ஜாமீன் நிபந்தனை முற்றிலுமாக தளர்வு செய்யப்பட்டுவிட்டது என்றால், சரிதான். ஜாமீனில் நான் வெளியில் வந்த பிறகும், பாலக்கோடு நீதிமன்றத்தில் நான் வாக்குமூலம் கொடுக்கும் வரைக்குமான இடைப்பட்ட காலத்தில் நான் எங்கிருந்தேன் என்றால், திருச்சி மாவட்டம், பெரம்பலூரில் இருந்தேன். கோயம்புத்தூரில் உள்ள சிபிசிஐடி போலீசார் எவ்வாறு வரவழைத்தனர் என்றால், ஒரு போலீசாரை அனுப்பி வரவழைத்தனர். எதற்காக என்னை போலீசார் வரவழைக்கின்றனர் என்பது குறித்து வழக்கறிஞரிடமோ அல்லது சட்ட ஆலோசகரிடமோ ஆலோசனை

பெற்றேனா என்றால், இல்லை. சிபிசிஐடி போலீசார் விசாரித்தபோது என்னை இக்குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறாயா எனக் கேட்டார்களா என்றால், இல்லை. நான் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறேன் என்று ஏதேனும் கூறினேனா என்றால், இல்லை. அதன் பின்னிட்டு என்னை சிபிசிஐடி போலீசார் எப்போதாவது விசாரித்தார்களா என்றால், அதன் பின்னிட்டு 10 நாட்கள் கழித்து என்னை விசாரித்தனர். அப்போதும் எனக்கு எவ்வாறு தகவல் கொடுக்கப்பட்டது என்றால், சிபிசிஐடி போலீசார் ஒரு காவலரை நேரில் அனுப்பி என்னை வரவழைத்தார்கள். அப்போது சிபிசிஐடி போலீசார் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க சொல்லி கேட்டார்கள் என்றால், சரிதான். நான் என்னுடைய பொறியியல் கல்லூரி படிப்பை எங்கு படித்தேன் என்றால், கடலூர் மாவட்டம் தொழுதூரில் உள்ள நாவலர் நெடுஞ்செழியன் பொறியியல் கல்லூரியில் பயின்றேன். நான் பொறியியல் பட்டம் பெற்ற பிறகு எத்தனை வருடங்கள் கழித்து இந்த வழக்கில் கைதானேன் என்றால், 3, 4 வருடங்கள் இருக்கும். நான் ஜாமீனில் வெளியே வந்த பிறகு நிபந்தனை கையெழுத்து செய்யும் சமயங்களில், வழக்கறிஞரை சந்தித்து ஆலோசனை பெற்றேனா என்றால், இல்லை. நிபந்தனை தளர்விற்கு பின்னராவது வழக்கறிஞரை சந்தித்து ஆலோசனை பெற்றேனா என்றால், இல்லை. நான் குற்றத்தை ஒப்புக்கொண்டால் எனக்கு தண்டனை கிடைக்குமா என காவல் துறையினரைக் கேட்டேனா என்றால், நான் கேட்கவில்லை. நான் பி.இ பட்டதாரி என்பதால், இக்குற்றத்தை ஒப்புக்கொண்டால் தண்டனை கிடைக்கும் என்பது எனக்கு தெரியுமா என்றால், தெரியும். நான் கல்லூரிப் படிப்பை முடித்து இளம்வயதில் இருப்பதால் குற்றத்தை ஒப்புக்கொண்டால்

எனது எதிர்காலம் பாதிக்கும் என காவலர்களிடம் கூறினேனா என்றால், இல்லை. அவ்வாறு தண்டனை கிடைக்கும் நிலையிருந்தாலும் போலீசார் கூறியதால் குற்றத்தை ஒப்புக்கொள்வதாக கூறினேனா என்றால், இல்லை. 2 வது முறையாக சிபிசிஐடி காவல் நிலையத்தில் என்னை அழைத்தபோது என்னிடம் ஏதேனும் வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால், வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அந்த வாக்குமூலத்தை பாலக்கோடு நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிப்பதற்கு முன்பாக படித்துப் பார்த்தேனா என்றால், இல்லை. நான் எந்தவிதமான வாக்குமூலத்தையும் படிக்காமல் 19.09.2013 ம் தேதி பாலக்கோடு நீதிமன்றததில் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால், சரிதான். 19.09.2013 ம் தேதிக்கு முன்பாக பாலக்கோடு நீதிமன்றததில் வாக்குமூலம் கொடுப்பதற்காக அழைப்பாணை ஏதேனும் வந்ததா என்றால், அழைப்பாணை வந்தது. 2 முறையாக கோவை சிபிசிஐடி போலீசார் விசாரித்ததற்கு பிறகு, எவ்வளவு நாட்கள் கழித்து நான் பாலக்கோடு நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்தது என்றால், சுமார் 10 நாட்களுக்கு பிறகு வாக்குமூலம் கொடுக்க அழைப்பாணை வந்தது. அந்த அழைப்பாணையில் என்ன விவரங்கள் குறிப்பிடப் பட்டிருந்தது என்றால், இந்த வழக்கு சம்பந்தமாக குவிமுச 164 பிரிவின் கீழான வாக்குமூலம் கொடுப்பதற்கான விவரங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. இவ்வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்பாக குவிமுச 164 பிரிவின் கீழான வாக்குமூலம் என்றால் என்பதனை நான் தெரிந்து கொண்டேனா என்றால், நான் எனது வழக்கறிஞரை விசாரித்து தெரிந்து கொண்டேன். குவிமுச 164 பிரிவின் கீழான வாக்குமூலம் கொடுப்பதற்கு எனக்கு விருப்பம் இருப்பதாக 2 வது முறையாக சிபிசிஐடி போலீசார் என்னை

விசாரித்தபோது நான் கூறிய விவரத்தை எனது வழக்கறிஞர் முத்துசாமியிடம் சொன்னேனா என்றால், சொல்லியுள்ளேன். வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்பாக நான் எப்போதாவது பாலக்கோடு நீதிமன்றத்திற்கு சென்றுள்ளேனா என்றால், இல்லை. பெரம்பலூரிலிருந்து பாலக்கோடு நீதிமன்றததிற்கு எவ்வளவு தூரம் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால், 250 கிலோ மீட்டர் தூரம் என்பதை தெரிந்து கொண்டேன். வாக்குமூலம் கொடுக்கவேண்டி எத்தனை மணிக்கு பாலக்கோடு நீதிமன்றத்திற்கு வந்தடைந்தேனா என்றால், காலை 10 மணியளவில் நான் எனது நண்பர் ரகுமானுடன் காரில் சென்றேன். வாக்குமூலம் கொடுப்பதற்காக அழைப்பாணை பெற்ற பிறகும், நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுப்பதற்கு முன்பாகவும், நான் சிபிசிஐடி காவல் அதிகாரிகளையோ அல்லது கம்பையநல்லூர் காவல் அதிகாரிகளையோ சென்று பார்த்தேனா என்றால், இல்லை. நான் நீதிமன்றததிற்கு வாக்குமூலம் கொடுக்க சென்றபோதும் சிபிசிஐடி காவல் அதிகாரிகளோ அல்லது கம்பையநல்லூர் காவல் அதிகாரிகளோ நீதிமன்ற வளாகத்தில் இருந்தார்களா என்றால், இவ்வழக்கு சம்பந்தப்பட்ட யாரோ ஒரு காவலர் இருந்தார். அந்த காவலர் எவ்வாறு வழக்குடன் சம்பந்தப்பட்டார் என்பதை தெரிந்து கொண்டேன் என்றால், நான் அவரிடம் சென்று இது குறித்து கேட்டபோது அறிந்து கொண்டேன். நான் கனம் நீதிபதி அவர்கள் முன்னிலையில் எத்தனை மணிக்கு ஆஜரானேன் என்றால், காலை 11 மணியளவில் சந்தித்தேன். நான் குற்றவில் நடுவரிடம், 2 முறையாக கோவை சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தபோது, நான் குவிமுச 164 பிரிவின் கீழான வாக்குமூலம் கொடுக்க விருப்பமிருப்பதாக கூறாததைப் பொறுத்து, குற்றவியல் நடுவரிடம் கூறினேனா என்றால், இல்லை. வாக்குமூலம்

கொடுப்பதற்கு முன்பாக, அவ்வாறு வாக்குமூலம் கொடுக்க விரும்புகிறாயா, அவ்வாறு கொடுத்தால் அது எனக்கு எதிராக பிரயோகிக்கப்படும் என்ற விபரத்தினைக் கூறினாரா என்றால், கூறினார். அவ்வாறு நடுவர் கேட்டவுடன் நான் பி.இ படிப்பு படித்திருக்கும் நபர் என்பதால் வாக்குமூலம் கொடுத்தால் தனக்கு எதிராக பயன்படுத்தக்கூடும் என்றும், 2 வது முறையாக கோவை சிபிசிஐடி போலீசார் விசாரித்தபோது வாக்குமூலம் கொடுக்க விருப்பம் இருப்பதாக கூறவில்லை என்ற எண்ணங்கள் என் நினைவுக்கு வந்ததா என்றால், நினைவிருந்தது. என்னுடைய எதிர்காலம் பாழானாலும் சரிஎன்று எண்ணி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கலாம் என முடிவுக்கு வந்து விட்டேன் என்றால், சரிதான். பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் பிறந்து, கடலூர் மாவட்டம், தொழுதூர் கல்லூரியில் 5 ஆண்டுகள் படித்து பொறியியல் பட்டம் பெற்றது எனது வாழ்க்கையினை மேம்படுத்திக் கொள்வதற்காகத்தான் என்றால், சரிதான். குவிமுச 164 பிரிவின் கீழான வாக்குமூலம் கொடுப்பதற்காக 2 வது நாள் நீதிமன்றத்தில் ஆஜரான போதும் நான் இதே எண்ணத்துடன் தான் இருந்தேனா என்றால், அதே எண்ணத்துடன்தான் இருந்தேன். நான் தண்டிக்கப்பட்டாலும் பரவாயில்லை எதிரிகள் அனைவரும் தண்டிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தில்தான் நான் அவ்வாறு செயல்பட்டேனா என்றால், இல்லை. நான் கொடுத்த வாக்குமூலங்கள் போலீசார் கட்டாயப்படுத்தி தூண்டியதன்பேரில் கொடுக்கப்பட்டவை என்றால், இல்லை. போலீசார் தூண்டியதன் பேரில்தான், பென்டிரைவ் மூலமாக வினாவிடைத்தாள்களை பதிவு செய்து 25 வது எதிரி பாலாஜிக்கு, 22 வது எதிரி சுரேஷ்குமார் வழியாக கொடுக்கப்பட்டதாக நான் பொய்யாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல.